Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

04.04.2020 077 316 5555 சனிக்கிழமை

## கொரோனா மேலும் ஒருவர் நலம்

கொழும்பு, ஏப்.4
இலங்கையில் கொரோனா வைரஸ் எனப்படும் 'கொவிட் 19' தொற்றுக்கு உள்ளாகியிருந்த மேலும் ஒருவர் குணமடைந்துள்ளார் என்று சுகாதார

2

## கொரோனா 162

யாழ்ப்பாணம், ஏப்.4
கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட மேலும் மூவர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 162 ஆக உயர்வடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு

2

# வடக்கே வரும் பொருள்கள் இனி இறங்கும் விலைகள்!

யாழ்ப்பாணம்.ஏப் .4
கொரோனாத் தொற்று நோய் காரணமாக வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பொருள்களின் அதி கூடிய விலையேற்றத்தைத் தடுக்க வடக்கின் 5 மாவட்டங்களுக்கும்,அத்தியாவசியப் பொருள்கள் கொண்டுரப்படவுள்ளன. இது தொடர்பில் அந்தந்த மாவட்டச் செயலர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ சீனி 117 ரூபா விலையில்,

2

# 3 மாதங்களுக்கு ஊரடங்கு!

- நிலைமை மிக மோசம்
- மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 4
கொரோனா வைரஸை திட்டமிட்டுக் கட்டுப்படுத்த வேண்டுமெனில், குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்காவது நாடு முழுவதும் தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு முடியாவிட்டால், இடையிடையே ஊடரங்குச் சட்டத்தைத் தளர்த்தாது, தொடர்ச்சியாக ஒரு மாதத்துக்குக் கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மருத்துவ ஆராய்ச்சி நிறுவனப் பணிப்பாளர் மருத்துவர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

2

## கொரோனா காவு 5



கொழும்பு, ஏப்.4
இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட மற்றுமொருவர் இன்று காலை உயிரிழந்துள்ளார். இந்த உயிரிழப்புடன் நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது.

2

## சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.4
நாட்டில் காலநிலையில் இன்று சிறிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால் சக்தி வாய்ந்த மின்னல் தொடர்பில், வானிலை மத்திய நிலையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த எச்சரிக்கை இன்று பிற்பகல் 1 மணியிலிருந்து இரவு 11 மணி வரை நீடிக்கும் என்றும் வானிலை மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (க-114)

## 'கொரோனா' பெண்ணுக்கு பிறந்தது குழந்தை

பேருவளை பகுதியில் சம்பவம்

கொழும்பு, ஏப்.4
களுத்துறை மாவட்டம், பேருவளை பன்னில பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட பிரதேசத்தில் 28 வயதுடைய கர்ப்பிணி களுத்துறை நாகொட வைத்தியசாலையில் இன்று சிசுவைப்

2

## கொரோனா தொற்று சோதனை யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்

மருத்துவமனைப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 4
கொரோனா வைரஸ் தொற்றை கண்டறிவதற்கான பரிசோதனை யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பமாகியுள்ளதாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

2



## நாய்ச் சண்டையால் இளைஞர் சாவு!

கொழும்பு, ஏப்.4
முல்லைத்தீவு, குமுழமுனையில் தலையில் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். குமுழமுனையைச் சேர்ந்த இராசலிங்கம்

2

## பழகுவோரை மறக்காதீர்கள்

பிதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண அறிவுறுத்து

கொழும்பு, ஏப்.4
யாருடன் பழகினோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். முக்கியமாக மேல் மாகாணத்தின் கொழும்பு களுத்துறை, கம்பஹா மாவட்டங்கள் புத்தளம், கண்டி, யாழ். மாவட்டங்களில் உள்ளவர்கள் இந்தக் காலப்பகுதியில் பழகியவர்கள் தொடர்பில் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இவ்வாறு பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண அறிவுறுத்தியுள்ளார். கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2

## அரியாலை ஆராதனையில் பங்கேற்று மறைந்திருப்போர் அடையாளப்படுத்துக!

யாழ்ப்பாணம், ஏப். 4
அரியாலையில் இடம்பெற்ற ஆராதனையில் பங்கேற்று இதுவரை தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகாமல் யாராவது மறைந்திருந்தால், உடனடியாக தங்களை அடை

2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# 3 மாதங்களுக்கு

“தற்போதைய நிலைவரத்தின் படி இன்னும் இரு வாரங்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர் களின் எண்ணிக்கை இரட்டிப்பாகும். நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் பரவல் வீட்டுக்குள் மட்டும் (3ஏ கட்டம்) உள்ளது. இது வீதிக்கு வருமானால் (3பீ நிலை) அதனால் ஏற்படும் விளைவுகளை நினைத்தும் பார்க்கமுடியாது. பேருந்தில்கூட பயணிக்கமுடியாத நிலை உருவாகும்.” என்றும் அவர் வருங்கால நிலைமையின் பாதிப்பைச் சுட்டிக்காட்டினார்.

கொரோனாவால் இதுவரை நாட்டில் 159 பேர்வரை இனங்காணப்பட்டுள்ளனர். 5 பேர் உயிரிந்துள்ளனர். இந்த நிலையில் அவர் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளார். (த-44)

# வடக்கே வரும் பொருள்கள்

ஒரு லட்சத்து 55 ஆயிரம் கிலோ சீனியும், ஒரு கிலோ வெங்காயம் 160 ரூபா வீதம் ஒரு லட்சம் கிலோ வெங்காயமும் , ஒரு ரின் மீன் 100 ரூபா வீதம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரின் மீனும் ,கிலோ 98 ரூபா விலையில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கிலோ அரிசியும் ஐந்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் உடனடியாக யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு அரிசி 20 ஆயிரம் கிலோ , சீனி 50 ஆயிரம் கிலோ ,பருப்பு 20 ஆயிரம் கிலோ என்பன எடுத்துவரப்படவுள்ளன. அதேநேரம் உள்ளூர் மீனவர்களின் நன்மை கருதி மீன்ரின் எடுத்து வரப்படவில்லை என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 50 ஆயிரம் மீன்ரின் , 50 ஆயிரம் கிலோ அரிசி , 25 ஆயிரம் கிலோ சீனி , 15 ஆயிரம் கிலோ பருப்பு , பெரிய வெங்காயம் 15 ஆயிரம் கிலோ அனுமதிக்கப்பட்ட நிலையில் அரிசி தவிர்ந்த ஏனைய பொருள்கள் ஏற்றப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்துக்கு 25 ஆயிரம் கிலோ பருப்பு , 25 ஆயிரம் மீன்ரின். 30 ஆயிரம் கிலோ சீனி, 10 ஆயிரம் கிலோ வெங்காயம் அனுமதிக்கப்பட்ட நிலையில் தேவை கருதி அரிசி , ரின்மீன் தவிர்த்து சீனி , பருப்பு , வெங்காயம் ஏற்றப்படுகின்றது என்றும், இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்துக்கும் அனுமதிக்கப்பட்ட பொருள்களில் அரிசி தவிர்ந்த ஏனைய பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப-105)

# கொரோனா காவு...

ஹோமாகமவைச் சேர்ந்த 44 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இத்தாலியில் இருந்து நாடு திரும்பிய அவர் கடந்த 23ஆம் திகதி கந்தக்காடு தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் அவர் கொரோனா தொற்றாளராக இனங்காணப்பட்டு 26ஆம் திகதி வெலிக்கந்த ஆதார வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதே அவரது உடலுக்குள் கொரோனா வைரஸ் தீவிரமாக நுழைந்திருந்தது. அதனால் தான் அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு வேறு எவ்விதமான நோய்களும் இருக்கவில்லை. அவர் இன்று காலை உயிரிழந்துள்ளார். இவ்வாறான உயிரிழப்பு மிகவும் வருத்தமளிக்கின்றது - என்றார். (எ-22)

# கொரோனா மேலும்...

அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி குணமடைந்தோரின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் இதுவரை 162 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 25 பேர் குணமடைந்து மருத்துவமனைகளில் இருந்து வெளியேறியுள்ளனர். இதுவரை நாட்டில் கொரோனா தொற்றால் 5 பேர் உயிரிழந்துள்ளனர். (எ)

# பழகுவோரை....

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாருடன் எல்லாம் பழகினோம் என்பதைத் தயவு செய்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு ஏதேனும் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறி தென்பட்டால் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவியுங்கள். நீங்கள் உண்மையான தகவல்களை வழங்கும் போது உங்களையும் உங்களைச் சுற்றி இருப்போரையும் காப்பாற்ற இலகுவாக இருக்கும். தயவு செய்து உண்மைகளை மறைக்காதீர்கள்- என்றார். (எ)

# ‘கொரோனா’ பெண்ணுக்கு

பிரசவித்துள்ளார். அந்தப் பெண்ணின் இரத்த மாதிரியைச் சோதனை செய்த போது, அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி வருண செனவிரத்ன தெரிவித்தார். அந்தப் பெண் பிரசவித்த சிசுவின் நிலை தொடர்பாக மருத்துவர்கள் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர். தாயையும் சிசுவையும் மருத்துவர்கள் தனிமைப்படுத்தியுள்ளனர்.

அதையடுத்து, பேருவளையில் இதுவரை இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது. (எ-22)

# நாய்ச் சண்டையால்...

ரமேஷ் (வயது-26) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அயலில் உள்ள வீடொன்றில் வளர்க்கப்பட்ட நாய் குறித்த இளைஞரது வீட்டிலிருந்த பொருள்களை எடுத்துச் சென்றதால், அந்த நாயை இவர் கட்டி வைத்துள்ளார். அதையடுத்து அயல் வீட்டினருக்கும், இவருக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறி இளைஞர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலில் தலையில் படுகாயமடைந்த இளைஞர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவர் சிகிச்சை பயனின்றி நேற்று வெள்ளிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதியில் உள்ள 3 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேரை முல்லைத்தீவுப் பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# கொரோனா 162

சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியிருக்கும் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. இலங்கையில், 25 பேர் தொற்றுக்குள்ளாகி குணமடைந்து வெளியெறியுள்ள நிலையில் ஐந்து உயிரிழப்புகள் இதுவரை பதிவாகியுள்ளன. மேலும், 273 பேர் கொரோனா தொற்று என சந்தேகிக்கப்படும் நிலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர் இன்றையதினம் இனங்காணப்பட்ட மூவரும் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது தொடர்பான தகவல்களை சுகாதார அமைச்சு இதுவரை வெளியிடவில்லை. (ப)

# கொரோனா தொற்று சோதனை...

யாழ். மருத்துவ பீடத்துடன் இணைந்து இன்று முதல் பிசிஆர் சோதனைகள் முன்னெடுக்கபடுகின்றன. இன்று பரீட்சார்த்தமாக பரிசோதனை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ,5)

# அரியாலை ஆராதனையில்...

யாளப்படுத்துமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் சுவிஸ் போதகர் ஒருவரால் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் தற்போது ஒவ்வொருவராக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுடன் நெருங்கிப் பழகிய 325 பேர் வரையிலானவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையில் அந்த தேவாலயத்துக்குச் சென்று இன்றுவரை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் சிலர் இருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. அவ்வாறு இருப்பவர்கள் பற்றியத் தகவல்களைத் தெரியப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளன. மேலும் அவர்கள் தாமாக முன்வந்து தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்- என்றார். (ஒ,5)



# 12, 223 பேர் கைது

கொழும்பு, ஏப். 4

ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் 12 ஆயிரத்து 223 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை, இன்று காலை வரையான 24 மணி நேரத்தில் ஊரடங்கை மீறிய ஆயிரத்து 493 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 360 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றுக் காரணமாக கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதிவரை நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.(எ-22)

# பிறப்பு சான்றிதழுக்கு அவசரம் வேண்டாம்!

கொழும்பு, ஏப். 4

புதிய பிறப்புச் சான்றிதழைப் பெறுவதற்கு தற்போதைய சூழ்நிலையில் அவசரப்பட தேவையில்லை என்று பதிவாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

“ குழந்தை பிறந்து மூன்று மாதங்கள்வரை பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியும். கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தி மக்களைப் பாதுகாப்பதற்காக நாட்டில் தற்போது ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப் பட்டுள்ளது. எனவே, இந்தக் காலப்பகுதியில் புதிய பிறப்புச் சான்றிதழ்களை பெறுவதற்குப் பதற்றமடைய வேண்டியதில்லை.

நிலைமை வழமைக்கு திரும்பியதும் அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மூன்று மாதங்கள்வரை அவகாசம் இருக்கின்றது.” என்று திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (த-44)




# இன்சுலினுக்கு தட்டுப்பாடு

கொழும்பு, ஏப்.4

தற்போது நாட்டில் உள்ள அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இன்சுலின் பற்றாக்குறை காணப்படுகின்றது என்று அனைத்து இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஜெயந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இன்சுலின் பயன்படுத்தப்படுகின்றது. தற்போது அரச மருத்துவமனைகளில் இன்சுலின் பற்றாக்குறை நிலவுகின்றது.

இன்சுலின் பெறுவதன் மூலம் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும் பல நீரிழிவு நோயாளிகள் அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உள்ளனர். ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டுள்ளதால் மருத்துவமனைகள் பதிவு செய்யப்பட்ட நோயாளிகளுக்குத் தேவையான இன்சுலினை அவர்கள் தபால் மூலம் வீடுகளுக்கு பெற்றுக்கொள்கின்றனர். இந்த பிரச்சினைக்கு உடனடி தீர்வு வழங்க வேண்டும் - என்றார். (எ)



# நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கு மருந்து

## ஆயுள்வேதத் திணைக்களம் தயாரிக்க நடவடிக்கை

கொழும்பு, ஏப்.4

நோய் எதிர்ப்பு சக்திக்கான மருந்து மற்றும் கிருமித் தொற்று நீக்கியை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு ஆயுள்வேதத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஆயுள்வேத ஆணையாளர் நாயகம் சத்துர குமாரதுங்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான மருந்துகள் மற்றும் கிருமித் தொற்று நீக்கிகளை மாகாண ஆயுள்வேதத் திணைக்களங்களூடாக வீடுகளுக்கே வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு அமைய, ஆயுள்வேத உற்பத்திகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்று ஒழிப்பு தொடர்பில், ஆயுள்வேத மற்றும் சுதேச மருத்துவம் தொடர்பான பரிந்துரைக்கு சுகாதார அமைச்சால் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

> **“ கொத்தமல்லி, இஞ்சி உள்ளிட்ட மூலிகைகள் அடங்கிய கசாயத்தை பருகுவதற்கும் ஆயுள்வேதத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இவை நோய் எதிர்ப்பு சக்திக்கு அதிக பலன்களை தரும்.**

இந்தக் குழுவால் ஆயுள்வேத முறையிலான மருந்துகள் தயாரிக்கப்பட்டுள்ளன. வேப்பிலை மற்றும் தேசிக்காய் இலைகளைப் பயன்படுத்தி புகை விசிறுமாறும் இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது.

கொத்தமல்லி, இஞ்சி உள்ளிட்ட மூலிகைகள் அடங்கிய கசாயத்தை பருகுவதற்கும் ஆயுள்வேதத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இவை நோய் எதிர்ப்பு சக்திக்கு அதிக பலன்களை தரும். இந்த மூலிகைகள் அடங்கிய பொதிகளை ஆயுள்வேதத் திணைக்களம் தற்போது தயாரித்துள்ளது-என்றார். (எ)



கலட்டி அம்மன் இளைஞர் கழகத்தினரால் ஜே/100 கிராம அலுவலரின் ஆலோசனைக்கு அமைவாக அந்தப் பிரிவில் உள்ள 135 குடும்பங்களுக்குத் தேவையான உலர் உணவுப்பொதிகள் கலட்டி அம்மன் ஆலய மண்டபத்தில் இன்று வழங்கப்பட்டன. (ஐ-20)

# 6 நிலையங்களிலிருந்து 288 பேர் வெளியேறினர்

கொழும்பு, ஏப். 4

கொரோனா தனிமைப்படுத்தல் நிலையங்களான தியத்தலாவை, குண்டசாலை, ரன்தம்பே, போகொட, பெரியகாடு, தந்திரிமலை ஆகிய நிலையங்களிலிருந்து 288 பேர் நேற்று தத்தம் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனரென்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார். இதில் 9 பிக்குகளும் உள்ளடங்குகின்றனர் என்றும் தெரிவித்தார். இதுவரை குறித்த மத்திய நிலையங்களிலிருந்து தனிமைப்படுத்தலை நிறைவு செய்துகொண்ட 2ஆயிரத்து 598 பேர் வெளியேறியுள்ளனரென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-114)

# மொனராகலை மாவட்டத்தில் 1,145 பேர் சுயதனிமையில்

கொழும்பு, ஏப்.4

வெளிநாடுகள் மற்றும் கொழும்பு உள்ளிட்ட வெளி பிரதேசங்களில் இருந்து மொனராகலை மாவட்டத்துக்கு வருகை தந்த ஆயிரத்து 145 பேர் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் அவரவர் வீடுகளில் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று மொனராகலை மாவட்டச் செயலர் குணதாச சமரசிங்க தெரிவித்தார்.

இதில் 140 பேர் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் என்றும், இவர்கள் மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பாலித அதிகாரியின் ஆலோசனைக்கமைய சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டனர். அத்துடன் 3 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் மொனராகலை மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-114)





வவுனியா வடக்கு புளியங்குளம் குறிசுட்டகுள கிராமத்தில் நாளாந்தம் கூலி வேலை செய்யும் 34 குடும்பங்களுக்கு மரக்கறி வகைகள் வழங்கப்பட்டன. வன்னி தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க நெடுங்கேணி பனை, தென்னை அபிவிருத்தி சங்கத்தால் இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

# வீட்டுத்தோட்டம் அமைக்க பயனாளிகளுக்கு விதைகள்

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்ப்பாண மாவட்டத்தில் வீட்டுத் தோட்டத்தை மேற்கொள்வதற்கு 7 ஆயிரத்து 500 மரக்கறி விதை பைக்கற்றுக்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட விவசாயப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை அடுத்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மக்கள் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். இந்த நிலையைப் பயனுள்ளதாக மாற்றுவதற்கு வீட்டுத் தோட்டம் செய்யும்படி அரசு பணித்துள்ளது. இதற்கு அமைவாக முதல் கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கத்தரி, வெண்டி, பயிற்றங்காய், கறிமிளகாய், மிளகாய் ஆகிய 5 வகையான மரக்கறிகளின் விதைகள் வழங்கப்படவுள்ளன.

ஒரு பைக்கற் விதை 20 ரூபா வீதம் 7 ஆயிரத்து 500 பைக்கற் விதைகள் பயனாளிகளுக்கு கமநல சேவைகள் திணைக்களம் ஊடாக வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# தெற்கு வாகனங்களால் முல்லை மக்கள் அச்சம்

முல்லைத்தீவு, ஏப்.4

மாவட்டங்களுக்கு இடையே பயணிப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ள போதும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு தெற்கில் இருந்து பல்வேறு வாகனங்கள் வருகின்றன என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். புத்தளம், தம்புள்ள, கொழும்பு போன்ற பகுதிகளில் இருந்து மீன் கொள்வனவுக்கும், மரக்கறி வியாபாரத்துக்கும் இந்த வாகனங்கள் முல்லைத்தீவுக்கு வருகின்றன என்று கூறப்படுகின்றது.

தெற்கில் கொரோனா தொற்று அதிகம் உள்ள இடங்களில் இருந்து வரும் வாகனங்களால் கொரோனா வைரஸ் தொற்று முல்லைத்தீவு மாவட்டத்திலும் பரவலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாகப் பொது மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஐ-19)

# 60 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

முல்லைத்தீவு, ஏப்.4

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு தெற்கு கிராமத்தில் வசிக்கும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 60 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ஊரடங்குச் சட்டம் நாட்டில் பிறப்பிக்கப்பட்டதையடுத்து நாளாந்தம் கூலி வேலை செய்பவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட உடையார்கட்டு தெற்கு கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவியை சிறீ சபாரத்தினம் அறக்கட்டளையினர் வழங்கியிருந்தனர். (ஐ-19)



# நெல் இருப்பை உறுதி செய்க!

## கிளி. மாவட்டச் செயலருக்கு கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் கடிதம்

கிளிநொச்சி, ஏப்.4

கிளிநொச்சி மாவட்டத்தின் நெல் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன்.

அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

“நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சம் காரணமாக இயல்பு நிலைமை பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, அரசின் அறிவிப்புக்களை மீறி அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை நாள்தோறும் அதிகரித்து வருகின்றது. தற்போது நிலைமை மோசமடைந்துள்ளதுடன், பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலைமையும் காணப்படுகின்றது.

நெற்களஞ்சியமான கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பெருமளவு நெல் பிற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டமையால் தற்போது சாதாரண அரிசி ஒரு கிலோ 140 ரூபா வாக அதிகரித்துள்ளது.

தற்போதைய நிலைமை தொடர்ந்தால் எதிர் வரும் நாட்களில் விலை இன்னும் அதிகரிக்குமே தவிர குறையப் போவதில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பான உண்மைத் தன்மையை ஆராய்வதுடன், கிளிநொச்சி மாவட்டத்தின் பாவனைக்கென எதிர்வரும் 6 மாதங்களுக்குத் தேவையான நெல் இருப்பைப் பேணுவதுடன், அரிசிக்கு உத்தரவாத விலையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்”- என்றுள்ளது. (ஐ-35)

# பூசா முகாமிலிருந்து 6 பேர் வெளியேற்றம்

கொழும்பு, ஏப். 4

கொரோனா தொற்று காரணமாக பூசா கடற்படை முகாமில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 6 பேர் நேற்றையதினம் வெளியேறியுள்ளனர்.

இவர்கள் அங்கிருந்து வெளியேறிய இரண்டாவது குழுவினர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர். குறித்த 6 பேரும் இலங்கையர்கள் எனவும், முதலாவதாக வெளியேறிய குழுவில் ஜப்பானைச் சேர்ந்த பெண்ணொருவர், பிரான்ஸை சேர்ந்த இருவர், இலங்கையைச் சேர்ந்த இருவர் என ஐவர் காணப்பட்டதாகவும் , தற்சமயம் குறித்த முகாமில் 64 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர். (ப-114)

# பாதுகாப்பு அங்கிகள் இன்றி திண்டாடும் பணியாளர்கள்

முல்லைத்தீவு, ஏப்.4

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா தொற்று நீக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு அங்கிகளோ, கவச உறைகளோ இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. முகக்கவசம் மட்டுமே அணிந்து அவர்கள் இந்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா தொற்று நாட்டில் அதிகரித்துள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பகுதிகளிலும், மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களிலும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்றி சுகாதாரப் பணியாளர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். அதனால் அவர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. குளோரின் தாக்கம் காரணமாக அவர்கள் தோல் தொடர்பான பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் செ.பிறேமகாந், “பிரதேச சபையின் சுகாதார ஊழியர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள் வழங்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்” என்று தெரிவித்தார். (ஐ-19)



# கொரோனாவை ஒழிப்பதற்கு போதனாவுக்கு 5 லட்சம்

*யாழ்ப்பாணம், ஏப்.4*

கொரோனா நோய்த் தொற்றுக் கான மருத்துவத்தை மேற் கொள்வதற்கான உபகரணங்க ளைக் கொள்வனவு செய்வ தற்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு ஐந்து லட்சம் ரூபா நிதி நன்கொடையாக வழங்கப் பட்டுள்ளது. யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தால், அந்த நிதி அண்மையில் கையளிக்கப்பட்டது. (ப-7)

## கொரோனாவால் உயிரிழந்தவர்களுக்கு

# தொற்றியது எப்படி? இன்னும் மர்மம்!

## அவதானமாக இருக்க மக்களுக்கு அறிவுறுத்து

*கொழும்பு, ஏப். 4*

கொரோனாவால் உயிரிழந்தவர்களுக்கு தொற்று எவ்வாறு பரவியது என்பது இது வரை கண்டறியப்படவில்லை. எனவே அனைவரும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரி கள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள் ளாகி இதுவரை உயிரிழந்த நால்வருக்கும், குறித்த வைரஸ் எவ்வாறு பரவியது என்பது தொடர்பான தகவல் இதுவரை வெளியாக வில்லை. ஆகவே சமூகத்தில் கொரோனா தொற்று அறிகுறிகளை வெளிப்படுத்தாத வர்களும் இருக்கலாமென்று சந்தேகம் எழுந்துள்ளது.

கொரோனா தொற்றாளர்கள் சமூகத்தில் இணைந்திருப்பார்களானால், பெரியள வில் நோய்த் தொற்று ஏற்படக்கூடும். எனவே, கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவதையிட்டு, மக்கள் முன்னரை விட சுகாதார விதிமுறைகளை அதிகளவில் பின்பற்ற வேண்டும் என்று சங்கத்தின் பிரதித் தலைவர் சாரத கன்னங்கர எச்ச ரித்து அறிவுறுத்தியுள்ளார். (த-114)

# மட்டக்களப்பில் 2,362 பேர் தனிமைப்படுத்தலில்

*மட்டக்களப்பு, ஏப்.4*

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 2 ஆயிரத்து 362 பேர் அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ கண்கா ணிப்பில் உள்ளதாக பிராந்திய சுகாதார பணிப் பாளர் மருத்துவ அதிகாரி.எம். அச்சுதன் தெரி வித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலர் திருமதி கலாமதி பத்ம ராஜா தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரி விக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வெளிநாடுகளில் வேலைகளுக்காக சென்று திரும்பிய ஆயிரத்து 11 பேரும், அத்தோடு மட்டக்களப்பில் இருந்து வெளி மாவட்டங் களுக்கு வேலைகள் நிமித்தமாகவும், கல்வி நடவடிக்கைகளுக்காகவும் உறவினர், நண் பர்கள் வீடுகளுக்குச் சென்று வந்தவர்கள் ஆயிரத்து 351 பேருமாக மொத்தம் 2,362 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் தனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்கள் தொடர்ச்சியான மருத்துவக் கண் காணிப்பில் உள்ளனர். அவர்களுக்கு ஏதா வது அசாதாரணமான உடல்நிலை காணப் பட்டால் உடனடியாக தொடர் மருத்துவ நடவடிக்கை எடுப்பதற்கு மருத்துவமனை தயாராகவுள்ளது." என்றும் அவர் தெரிவித் தார். (ஐ-46)

# குருதிக்கொடை

*யாழ்ப்பாணம், ஏப்.4*

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலால் குருதி வங்கிகளில் ஏற்பட் டுள்ள குருதித் தட்டுப்பாட்டை சிறிதள வேனும் நிறைவு செய்யும் நோக்கில் நேற்று யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யில் குருதிக் கொடை வழங்கப்பட் டுள்ளது.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினர் இந்தக் குருதிக்கொடையை வழங்கியுள்ளனர். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் குருதி வங்கியில் ஒழுங்கு செய்யப்பட்ட நிலையில் ஒரே நேரத்தில் குருதிக் கொடையாளிகள் கூடுவதை தவிர்ப்ப தற்காக கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி தொடக்கம் நாளை 5ஆம் திகதி வரை இவ்வாறு குருதி வழங்கப்படவுள்ளது என்று சங்கத்தினர் தெரிவித்தனர். இதில் சங்க உறுப்பினர்கள் கலந்து கொள்வதோடு ஏனையோரும் கலந்து குருதிக்கொடை வழங்குவதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன. (ப-7)



# உள்ளூராட்சி சபைகளுக்கு கூட்டத்துக்கு அழைப்பு

*மன்னார், ஏப். 4*

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெ றும் கொரோனா தொடர்பான கலந்துரையா டலில் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர் கள் இணைத்துக்கொள்ளப்படுவர் என்று மன்னார் மேலதிக மாவட்டச் செயலர் சி.குண பாலன் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடல்களில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களையும் இணைத்துக் கொள்ளுங்கள் என்று மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபைத் தவிசாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத் துவது மற்றும் இணைந்து பணியாற்றுவது தொடர்பான கலந்துரையாடல் மன்னார் மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலன் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

அதில் மன்னார் மேலதிக மாவட்டச் செயலர் தெரிவிக்கையில், "இனிவரும் கொரோனா தொடர்பான கலந்துரையாடலில் உங்களுக் கும் அழைப்பு விடுக்கப்படும். அத்துடன் நீங்கள் கோரிய முகக் கவசங்கள் மற்றும் கிருமி தடுப்பு உப கரணங்களை உரிய திணைக்களங் களுடன் தொடர்புகொண்டு பெற்றுத் தருவ தற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மேலும் தெரிவித்தார். (த-213)

## கொரோனா சந்தேகம்

# 7பேர் நேற்று அனுமதி

*யாழ்ப்பாணம், ஏப். 4*

யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னையில் கொரோனா தொற்றுச் சந்தேகத்தின் அடிப்படையில் 7 பேர் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதுவரை 55 பேர் போதனா மருத்து வமனையில் சந்தேகத்தில் சேர்க்கப் பட்டு, கொரோனா தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப் பட்டு வெளியேறியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஓ,5)



# மக்களோடு முரண்பட்ட சமுர்த்தி அதிகாரி இடமாற்றம்

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர் பொதுமக்களுடன் முரண்பாடாக நடந்துகொண்டு மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கியிருப்பதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக அவரை இடமாற்றியுள்ளதாக மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த முறைப்பாட்டை விசாரணை செய்து அறிக்கையிடும்படி மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரை கோரியுள்ளேன். விசாரணை முடிவில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் முறைகேடாக நடந்திருந்தால் அதற்குரிய தண்டனை வழங்குவதற்கும் பணிக்கப்பட்டுள்ளது. விசாரணை இடம்பெறும் காலகட்டத்தில் தற்காலிகமாக அவர் இடமாற்றப்பட்டுள்ளார், என்றார். (ஒ,5)

# ஓய்வூதிய கொடுப்பனவு கிடைக்கவில்லையா?

## அழைப்பதற்கு தொலைபேசி இலக்கம் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஏப். 4

ஒய்வூதிய கொடுப்பனவு தபால் திணைக்களத்தினூடாக கிடைக்கப்பெறாதவர்கள், அது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1950 என்ற இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொண்டு அது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள முடியும் என்று தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன குறிப்பிட்டார். ஓய்வூதிய கொடுப்பனவுகளை நேற்றும், நேற்று முன்தினமும் தபால் ஊழியர்கள் பகிர்ந்தளித்தனர். 95 வீதமான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் கூறியுள்ளார். வழங்கப்பட்டுள்ள முகவரியில் சிலர் வசிக்காததன் காரணமாக அவர்களுக்கான ஒய்வூதியத்தை வழங்க முடியாதுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)

# போதைப் பாவனையும் கொரோனாவுக்கு காரணமா?

## அச்சத்தில் பொதுமக்கள்

மட்டக்களப்பு, ஏப். 4

நாட்டில் ஊரடங்குச் சட்டம் உள்ளபோதும், போதை வியாபாரிகளின் கெடுபிடிகளும் போதை பாவிப்பவர்களின் வன்முறையும் கொரோனா வைரஸ் விரைவாகப் பரவும் வாய்ப்பை ஏற்படுத்திவிடுமா என்று பொதுமக்கள் மத்தியில் அச்சம் நிலவுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் தமது அன்றாடக் கடமைகளை மேற்கொள்வதற்காகவும் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் நேரத்தில் போதை வியாபாரிகள் வெளியூர்களுக்குச் சென்று போதைப் பொருள்களைக் கொள்வனவு செய்து, உள் வீதிகளுக்கூடாகக் கொண்டு வருகின்றனர். ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் நேரங்களில் உள்வீதிகளைப் பயன்படுத்தி கிராமப்புறங்களுக்கு போதைப்பொருள்களைக் கடத்துகின்றனர். வெளிப்பார்வைக்குச் சந்தேகம் ஏற்படாதவாறு சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை ஆங்காங்கே நிறுத்தி சில வீடுகளில் ஒன்றுகூடுகின்றனர். அங்கு போதைப் பொருள்களை உட்கொள்கின்றனர்.

இவர்கள் போதைப் பொருள்களை உட்கொண்டால் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகக் காணப்படும் என்றும் எனவே இத்தகையவர்களுக்கு கொரனா தொற்று விரைவாகத் தாக்கலாம் என்றும் பொதுமக்கள் அச்சமடைகின்றனர். எனவே, போதை வியாபாரிகள் கைது செய்யப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (து-150)

# கொரோனாப் பரவலை தடுப்பதற்கே தகனம்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் விளக்கம்

கொழும்பு, ஏப்.4

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் உடல் புதைக்கப்பட்டால் மண் மூலம் வைரஸ் பரவக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் செயற்பட வேண்டிய முறை தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் முன்னரே அறிவித்துள்ளது. அதற்கேற்பவே உயிரிழந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னாள் பிரதமர் மற்றும் சில முன்னாள் அமைச்சர்கள் பரிசோதனைகள் பற்றி கருத்து தெரிவித்துள்ளனர். ஆரம்பத்திலேயே வைரஸ் நாட்டுக்குள் பரவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளே எம்மால் முன்னெடுக்கப்பட்டன. நாட்டினுள் வைரஸ் பரவ ஆரம்பித்த பின்னர் அது மேலும் விரிவடையாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நாம் எவ்வாறு வைரஸுடன் போராடுவது என்பது பற்றி தற்போது ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த அனைத்துக் காரணிகளையும் எடுத்துக் கொள்ளும் போது இந்த வைரஸ் சமூகத்துக்குள் மேலும் பரவுவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இடமளிக்க முடியாது.

கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டு 3 மாதங்களாகின்றன. இந்த வைரஸின் தன்மை மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக இதுவரையில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாகவில்லை. வைரஸ் பரவும் வேறு வழிமுறைகள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வைரஸ் பற்றி வெளியிடப்படும் சில தகவல்கள் உண்மைக்கு புறம்பானவையாகவும் உள்ளன.

வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த நபர்களின் இறுதி சடங்குகளை வெகு துரிதமாகச் செய்ய வேண்டிய துரதிர்ஷ்டவசமான சூழலிலேயே தற்போது நாம் இருக்கின்றோம். வைரஸ் பரவுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதனைத் தடுக்க நாம் முயற்சிப்போம். உடல்களைப் புதைப்பதற்கு அதிக நேரம் எடுப்பதோடு இதற்கு கூடுதலான மனித வளமும் தேவைப்படும்.

தற்போது காணப்படும் நிலவரத்தை எம்மால் கட்டுப்படுத்த முடியும். எனினும் நாம் எதிர்பாராத அளவு இறப்புக்கள் அதிகரித்தால் எம்மால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும். உடல்களைத் தகனம் செய்யும் போது நாட்டின் நிலைமை தொடர்பில் ஆராய வேண்டும். நாட்டில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் வெவ்வேறு நிலைமைகளே காணப்படுகின்றன. எம்மால் ஏதாவது ஒரு பிரதேசத்தில் இடம்பெறும் சம்பிரதாயத்தைக் கூறி அதன்படி செயற்படுமாறு கூற முடியும். எனினும் முழு நாட்டுக்கும் ஒரே வழிமுறையை ஏற்படுத்துவது சிரமமாகும்.

நாட்டில் நீரின் அளவு உயர் மட்டத்திலேயே காணப்படுகிறது. அது மாத்திரமின்றி மண் உரத்தைக் கொண்டதாகவும் இருக்கிறது. அதனால் வைரஸ் மண் மூலம் பரவக் கூடிய வாய்ப்புக்கள் கானப்படுகின்றன. நீர்கொழும்பில் காணப்படும் அதே நிலைமை மட்டக்களப்பில் காணப்படுவதில்லை.

மட்டக்களப்பில் காணப்படும் நிலைமை மாத்தறையில் காணப்படுவதில்லை. மக்களுடன் இணைந்தே எம்மால் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இது மிக முக்கியமானதொரு விடயமாகும். நீர்கொழும்பில் ஏற்பட்ட நிலைமையை அவதானிக்கும் போது, அந்தப் பிரதேச நிலத்தில் நீர் மட்டம் உயரத்திலிருப்பதால் உடலை மாளிகாவத்தைக்கு எடுத்துச் செல்ல முயற்சிக்கப்பட்டது. அங்கு செல்வதற்குத் தூரம் அதிகமாகும். அதனால் நோயாளர் எந்த வைத்தியசாலையில் இருந்தாலும் அவர் உயிரிழந்தால் அருகிலுள்ள தகனசாலையில் தகனம் செய்வதே எமது எதிர்பார்ப்பாகும்- என்றார்.(எ)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 04.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.